பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ கார்த்திகை மீ 23 உ. ஞாயிற்றுக்கிழமை (09 12 1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 13

## வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, டிச.9

வவுனியா மாவட்டத்தில், வவுனியா தெற்கு மற்றும் நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை ஆறு மணி முதல் நீக்கப்பட்டு விட்டது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது. [இ-எ]

# துறைநீலாவணையில் 76பேர் உயிருடன் எரிப்பு

## வியாழன், வெள்ளியில் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், டிசம்பர் 9

**கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள துறை நீலாவணைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களில் மாணவர்கள் உட்பட 76 பேர் உயிருடன் டயர் போட்டு எரிக்கப்பட்டனர்.**

**விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.**

இராணுவத்தினரும், ரெலோ இயக்கத்தினரும் சேர்ந்து இந்தச் செயல்களை மேற்கொண்டதாகவும்—

ஜீ. சி. ஈ. [சாதாரணதரப்] பரீட்சைக்குத் தோற்றச் சென்ற மாணவர்கள் உட்பட 76 பேரைக் கைது செய்து, சித்திரவதைக்கு உட்படுத்திய பின்னர் உயிருடன் டயர் போட்டு எரித்துக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

## மருந்துக்குப் பதிலாக ஈ. சி. ஜீ. தாள்கள்!

யாழ்ப்பாணம், டிச. 9

கேட்டது ஒன்று; கிடைத்தது இன்னொன்று; அதுவும் பயனில்லாதது.

இப்போது யாழ். மாவட்டத்தில் மிகத் தட்டுப்பாடான மருந்து வகைகளிலேயே இவ்வாறு கேட்காதது எமக்கு வந்து சேர்ந்தது.

''மருந்து அனுப்புங்கள், மருந்து அனுப்புங்கள்'' என்று ஒன்றுக்குப் பத்துத் தடவைகள் யாழ். போதனா ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரும், யாழ். பிராந்திய சுகாதார அலுவலகத்தினரும் கொழும்பில் உள்ள சுகாதாரத் திணைக்களத்திடம் கேட்டிருந்தனர்.

அதன் பலனாக, சற்றுத் திருவுளம் கொண்டு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நானாட்டான் குண்டு வீச்சில் அம்மன் கோயில் சேதம்

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மன்னார் மாவட்டம் நானாட்டானில் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் அம்மன் கோயில் ஒன்று சேதமுற்றது.

ஜீவன் என்ற மாணவன் காயமுற்றான்.

இந்தச் சம்பவத்துக்கு முன்னர் — காலை 6.30 மணியளவில் — மன்னார் அச்சங்குளத்தில் பொம்மர் ஒன்று நான்கு குண்டுகளை வீசியது. பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (உ)

## புளியம்பொக்கணையிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச. 9

கிளிநொச்சி, புளியம்பொக்கணைச்சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் இரு வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகளும் இறந்தன.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் முற்பகல் 11 30 மணியளவில் இடம்பெற்றது.

குண்டு வீச்சில் நாகதம்பிரான் கோவிலும் சேதமடைந்திருக்கக்கூடும் என்று முன்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. [ஒ]

## குமண இன்று கொழும்புக்கு; தபால்களும் செல்கின்றன

யாழ்ப்பாணம், டிச. 9

பருத்தித்துறை துறைமுகத்தில் அத்தியாவசியப் பொருள்களை இறக்கிய 'குமண' கப்பல் இன்று காலை கொழும்புக்குப் புறப்படவுள்ளது.

இந்தக் கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள், அவர்களது உதவியாளர்கள் மற்றும் மருத்துவ பணியாட்கள் அடங்கிய 52 பேர் குழுவும் இந்தக் கப்பலில் செல்வர் என எதிர்பார்க்கப்பட்டது. (ஓ-5-118)

## சிப்பாய்கள் வைத்த மிதிவெடியில் சிறுமி சிக்கினார்

யாழ்ப்பாணம், டிச. 9

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தெகிவத்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் 6 ஆம் கொலனிப் பகுதியில் வைத்ததாகக் கூறப்படும் மிதிவெடி ஒன்றில் சிக்கி 8 வயதுச் சிறுமி ஒருத்தி தனது வலது காலை இழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றது; [உ]

## கும்புறுபிட்டியில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், டிச. 9

கும்புறுபிட்டியில் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கி கடந்த வியாழனன்று இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு சிப்பாய் காலை இழந்தார். [உ-6]

## களுதாவளையில் மாணவன் கைது

யாழ்ப்பாணம், டிச. 9

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் களுதாவளையில் வைத்து ம பகீரதன் [வயது 14] என்ற மாணவன் களுவாஞ்சிக்குடி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## ஆரையம்பதியில் இளம் பெண் கொலை

யாழ்ப்பாணம், டிச. 9

கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதியில் நல்லதம்பி அனுஷியா (வயது18) என்ற இளம் பெண் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார்.

ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய பின்னர், கொலை செய்து, சடலத்தை அருகில் உள்ள மட்டக்களப்பு வாவியினுள் தூக்கி வீசினர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## குழந்தைகள், பெண்கள் உட்பட
## ஆறு பேரின் சடலங்கள் பச்சனூரில் மீட்பு!

கொழும்பு, டிச. 9

மூதூரில் உள்ள பச்சனூர் என்ற தமிழ்க் கிராமத்தில் 2 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட ஆறு பேரின் சடலங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

கடந்த வெள்ளியன்று இப்பகுதியில் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## 2வாரங்களுக்குப் போதுமான மருந்து வகைகளே இருப்பில்

யாழ்ப்பாணம், டிச 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இன்னும் 2வாரங்களுக்குப் போதுமான மருந்து வகைகளே கையிருப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி சம்பந்தப்பட்ட வட்டாரங்களிடம் கேட்ட போது —

இம் முறை மருந்து வகைகள் வந்ததே குறைவு. ஆனால் பாவனையோ வழமையை விட அதிகம்.

ஆகவே மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. – என்று தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க]

## மாங்குளத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், டிச. 9

மாங்குளம் பகுதியில் இராணுவத்தினர் முன்னர் புதைத்து வைத்திருந்ததாகக் கருதப்படும் மிதிவெடி ஒன்றில் சிக்கி பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்.

சு. ஆறுமுகம் (42 வயது) என்ற இந்த மாங்குளம் வாசி நேற்று முன்தினம் மிதிவெடியில் சிக்கி, ஒரு காலை இழந்தார். அவர் நேற்று உயிரிழந்தார். [உ-6]

## இளைஞர் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், டிச. 9

மாங்குளத்தில் முன்னர் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த முகாம் பகுதிக்குள் சென்ற ஒருவர் தமது காலை இழந்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வன்னிவிளாங்குளத்தைச் சேர்ந்த முருகையா அழகுராஜா (22 வயது) என்பவரே காலை இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஓ-5]

## ஆனையிறவில்

ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சியை நோக்கி நேற்று முன்தினம் மாலை ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஷெல் குண்டுகளால் பெரிதாக பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. [ஓ-117]

## ஜே. ஆர். மீண்டும் அரசியலுக்கு?

கொழும்பு, டிச. 9

நம்பினால் நம்புங்கள்! முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் அரசியலில் பிரவேசிக்கக் கூடும்!!

அதற்கான சாத்தியம் இருப்பதை நாமோ அல்லது வேறு எவருமோ ஊகம் தெரிவிக்கவில்லை. திரு. ஜெயவர்த்தனாவே உட்கருத்துப்பட அதனைக் கூறியிருக்கிறார்.

திரு. ஜெயவர்த்தனா இவ்வருடம் ஏப்ரல் மாதம் இந்தியா சென்றிருந்தார். அவரது காலஞ்சென்ற சகோதரர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா சுகவீனமுற்றிருந்ததால் பங்களூருக்குச் சென்று பகவான் சத்திய சாயிபாபாவின் ஆசியைப் பெறுவதே அந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

திரு. ஜெயவர்த்தனா தாம் பகவானைச் சந்தித்தது குறித்தும், அவரது தெய்வீகத்தினால் ஈர்க்கப்பட்டது குறித்தும், இலங்கை அரசியல் பற்றி பகவான் தெரிவித்தவை குறித்தும் கடந்த ஜூலை மாதம் கொழும்பில் பேட்டி ஒன்று அளித்திருந்தார்.

அந்தப் பேட்டியிலேயே, அவர் தாம் மீண்டும் அரசியலுக்கு வரக்கூடும் என்பதை சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசியல் குறித்து பகவான் சாயி பாபா தம்மிடம் கூறியவை குறித்து திரு. ஜெயவர்த்தனா அந்தப் பேட்டியில் பின்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்:

''இலங்கையில் தற்போதைய கஷ்டங்கள் நீண்ட காலம் தொடரும். இலங்கை அரசு தயாராகவும், விழிப்பாகவும் இருக்கவேண்டும்''

( 4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வேப்பம் உரம்

நெல், வெங்காயம், மிளகாய், புகையிலை மற்றும் சகல பயிர்களுக்கும் பாவிக்கக்கூடிய வேப்பம் உரம் விற்பனைக்கு உண்டு. சுப்பிரமணியம் அன்கோ ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கல்வியங்காட்டுச் சந்தையில் இருந்து 100 யார்) [15051]

## போட்டோஸ்ரட்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் தோணியோ வேலைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள் காலை 9.00 மணி – 2.00மணி வரை ஸ்கைலைன்ஸ் 281 B, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். [ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை] [சி–5487]

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை விரட்டுவதிலும், பயிர் நோய்களை அகற்றுவதிலும் வேப்பெண்ணெய் சிறந்தசாதனம் எனக் கண்டறியப்பட்டுள்ளது போத்தல் ரூ. 80/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/5508)

## மணமக்கள் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த 8 இல் செவ்வாய்க் குற்றமுள்ள 32 வயதுடைய பயிற்றப்பட்ட ஆசிரியைக்கும் 33 வயதுடைய செவ்வாய் குற்றமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் மணமக்கள் தேவை. மாற்று சம்பந்தம் செய்ய விரும்புவோரும் சகல விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். 158, C/o உதயன்: [15047]

## நியூ விக்ரேஸ்

நியூ விக்ரேஸ் ஸ்தாபனம் மீண்டும் வழமை போல நடைபெறுகிறது. ரேடியோ, மணிக்கூடு, மின்சார உபகரணங்கள் உடனுக்குடன் திருத்தியும், எமேஜென்சி லைட், சார்ஜ் செய்தும் கொடுக்கப்படும். ரேடியோ உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ளலாம். முன்பு எம்மிடம் திருத்துவதற்கென கொடுக்கப்பட்ட பொருட்களை இவ்வருட இறுதிக்குள் பெற்றுக் கொள்ளவும். நியூ விக்ரேஸ் B. M. C ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/5505)

## வாடகைக்கு

கதிரைகள், பீங்கான் கிளாஸ், எவசில்வர், பீங்கான் கப்வகைகள் முதலியன வாடகைக்கு எந்நேரமும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்: Barton Mather 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [14978]

## (I. A. B. Classes)

Institute of Bookkeepers (London) June 1991 (Exam) foundation Inder and finalsக்கான வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 15-12-1990 வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 12-12-1990 விபரங்கட்கு North Ceylon Technical Institute, 14 st, Peters lane Hospital Road, Jaffna. (C/5543)

## இப்பில் இப்பில்

கால் நடைக்கு உணவு, அடுப்புக்கு விறகு இப்பில் இப்பில் நட்டுப் பயன் பெறுவீர் ரூ.2/- அஞ்சல் முத்திரை அனுப்பி இப்பில் இப்பில் விதை பெறுவீர். மில்க்வைற் யாழ்ப்பாணம். (C/5501)

## உடன் தேவை

ஆண்களுக்கான ஆடை தைப்பதில் அனுபவம் வாய்ந்த ஆண், பெண் தையல்காரர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: பவானி காம்ரெக்ஸ் மத்திய சந்தை முன்பாக மானிப்பாய். [15069]

## Radio T. V Deck

புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்: 12-12-1990 துரித பயிற்சி நெறி இலகு விளக்கங்கள் செய்முறைப் பயிற்சியுடன் கூடியது. விபரங்கட்கு: North Ceylon Technical Institute, 14, St. Peters Lane, Hospital Road Jaffna (சி/5542)

# SUPER SHINE INSTITUTE

76/2, Temple Road, Jaffna.

## G. C. E. (A/L)

பிரத்தியேக வகுப்புகள்

கணக்கியல்:- ஆசிரியர் திரு. SAM
பௌதீகவியல் :- ஆசிரியர் திரு கலா

90, 91, 92 புதிய பிரிவு மாணவர்கள் வகுப்பு ஒழுங்குகளுக்காக 10-12-90 திங்கள் பிற்பகல் 2.30 மணிக்கு சமுகமளிக்கவும்.

[15066]

# London Accountancy Exam

## May / June 1991

புதிய பிரிவுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்

**15 - 12 - 1990**

C.I.M.A - Stage I, Stage II, and Stage III
A.A.T - All Stages
I.A.B - All Stages

Institute of Bankers [Sri Lanka] and Computer Basic வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்கட்கு:

## North Ceylon Technical Institute

14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna.

[சி–5511]

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1991

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

1991 ஆம் ஆண்டுக்கு கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பேரில், மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் அலுவலகத்தில் வைத்து என்னால் 20 – 12 – 90 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொன்றுக்குமான விண்ணப்பங்கள் அவற்றுக்கான பதிவுக் கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தபாலில் பெறவிரும்புவோர், பதிவுக் கட்டணத்தைக் காசோலையாக ''விசேட ஆணையாளர் ''வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை என்ற பெயரில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | பொருட்கள், சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | காகிதாதிகள் வழங்கல் | 50.00 |
| 2. | சுகாதார சேவைக்கான பொருட்கள் வழங்கல் | 50.00 |
| 3. | அச்சிட்ட படிவங்கள் பதிவேடுகள் வழங்கல் | 50.00 |
| 4. | மின்சாரப் பொருட்கள் வழங்கல் | 100.00 |
| 5. | வாகனத் தகடுகள் தயாரித்து வழங்கல் | 25.00 |
| 6. | சீருடைத் துணிகள், சப்பாத்துக்கள் வழங்கல் | 50.00 |
| 7. | மின்தூண்கள் வழங்கல் | 50.00 |
| 8. | சித்த ஆயுள்வேத மருந்துகள் வழங்கல் (அங்கீகாரம் உடையவர் மட்டும்) | 50.00 |
| 9. | வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்புச் செய்தல் | 50 00 |
| 10. | புத்தகங்கள் கட்டுதல் | 25.00 |
| 11. | தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் விநியோகம் | 50.00 |

வை இராசையா,
விசேட ஆணையாளர்,
வலிவடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, 05 – 12 – 1990 [சி–5507]

# பகிரங்க ஏல விற்பனை

வட்டுக்கோட்டை சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடங்களும் போறணைகளும், தளபாட உபகரணங்களும் பகிரங்க ஏலத்தில் 30-12-1990 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்க வளவில் விற்பனை செய்யப்படும்.

பொருட்களின் விபரம்

1. காரியாலய கற் சுவர் கட்டட ஓடுகளுடன் —01
2. 40 அடி நீள கொட்டகை —01
3. 45 அடி நீள தகரம் போட்ட கொட்டகை —01
4. போறணைக் கட்டடம் —04
5. தளபாடப் பொருட்கள் பல

ஏல விற்பனை நிபந்தனைகள் பற்றி சங்கத் தலைவருடன் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்.
சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்,
அரசடி வீதி, வட்டுக்கோட்டை.

06-12-1990. [15062]

# மெலிந்தா கிறீஸ்தவ புஸ்தக ஸ்தாபனம்

மேற்படி ஸ்தாபனம் கீழ்க்கண்ட எமது பழைய முகவரியில் (யாழ் ஆஸ்பத்திரி முன்பாக 10-12-1990 இல் இருந்து கிழமை நாட்களில் காலை 9.30 இல் இருந்து மாலை 3.00 மணி வரை திறந்திருக்கும். பில்லி கிராஹாம், அஸ்வார்டு ஸ்மித், ஸ்பர்ஜன், பேசிலியா சிலிங்க், ரிச்சர்ட் உம்பிராண்டு, தியோடர் வில்லியம்ஸ், சாம்ஜெயத்துரை ஆகிய கிறிஸ்தவ தாசர்களினதும் இன்னும் பல அபிஷேக ஊழியக்காரரினாலும் எழுதப்பட்ட நூல்கள் [தமிழில்] விற்பனைக்கு உண்டு.

## கில்ரன் றெக்கோடிங் சென்ரர்

554, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். [15052]

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
நெல்லியடி, கரவெட்டி.

# கேள்வி அறிவித்தல் - 1991

மேற்படி விடயம் தொடர்பான எனது 13-11-90 ஆம் திகதிய கேள்வி அறிவித்தலைத் தொடர்ந்து அறியத்தருவது கீழ்க்கண்ட பிரகாரம் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன்,

கேள்விப்பத்திர விநியோகம் —
19 – 12 – 90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் —
21 – 12 – 90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இ. ஐயாத்துரை
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு, பிரதேசசபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேசசபை, தலைமை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி.
06 – 12 – 90 [சி–5509]

# முதலாமாண்டு நினைவஞ்சலி



## செல்வி சித்திரகலா அமரசேனாதிபதி

அன்னை மடியில்:
20 – 07 – 1984

ஆண்டவன் அடியில்:
20 – 11 – 1989

திதி: 07 – 12 – 1990

### கண்ணீர்ப் பூக்கள்

சிரிப்பாய்க் களிப்பாய்ச் சிந்தியவாய் முத்துக்களாய்ச்
சித்திரகலா உன்னைக் கண்டுமனம் பூரித்தோம்
எண்ணொடு எழுத்தும் இனியதமிழ்ப் பாடல்களும்
வண்ணமாய்க் கற்கத் தொடங்கிய அந் நாட்களிலே
நம்புதற்கு முடியவில்லை நாவுரைக்கத் தோணுதில்லை
நாலுநாட் காய்ச்சலிலே
நம்மைவிட்டுப் போனதென்ன?
அண்ணனொடு அம்மாவும் ஐயாவையும் மறந்து
ஆண்டொன்று ஆனதம்மா ஆரெமக்கு ஆறுதலே

உமது பிரிவால் வாடும்:
**ஐயா, அம்மா, அண்ணன், குடும்பத்தினர்.**

''சுதா பவனம்''
மயிலியதனை,
தொண்டைமனாறு. [15020]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சந்ததி அழிப்பு

கடந்த ஆறு மாதங்களில் சிசு மரணங்கள், கர்ப்பிணித் தாய்மாரின் மரணங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகவும் அதிகரித்திருப்பதாகப் பிராந்திய சுகாதாரப் பகுதியின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதே போல வடக்கு - கிழக்கின் ஏனைய ஏழு மாவட்டங்களிலும் இவ்வகை அநியாயச் சாவுகள் உயர்ந்திருக்கின்றன.

தமிழர்களின் எதிர்காலச் சந்ததியை அழிக்கும் இந்த அக்கிரமத்துக்கு இரண்டு பிரதான காரணங்களைச் சுட்டிக்காட்டலாம். கர்ப்பிணித் தாய்மாருக்குப் போதிய போசாக்கான உணவு இல்லாமை, தகுந்த வைத்தியப் பராமரிப்பு இல்லாமை என்பது ஒரு காரணம். விமானத் தாக்குதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் கர்ப்பிணித் தாய்மார் பதற்றத்துக்கும், பீதிக்கும் அடிக்கடி ஆளாவதால் ஏற்படும் உடலியல், உளவியல் தாக்கங்கள் என்பவை இரண்டாவது காரணம்.

ஒரு பெண் கர்ப்பமுற்ற நாள் தொடக்கம், சிசு பிறக்கும் தினம் வரை மிகக் கவனத்துடனும், வைத்தியப் பராமரிப்புடனும் பேணப்பட வேண்டும். உணவு, சுகாதாரம், உடற்பயிற்சி என்பனவற்றில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும். அசாதாரண நிகழ்வுகளால் மன, உடல் அதிர்ச்சிகளுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுதல் பிரதானம்

ஒரு கர்ப்பவதிக்கு ஏற்படும் உடல் உளத் தாககங்களால், அவளது கருவறையில் வளரும் சிசுவின் உடல், உள வளர்ச்சி உடனடியாகவே பாதிப்புறலாம்; அல்லது பிறந்த பின்னர் கூட பாதிப்புத் தெரிய வரலாம்.

ஆனால் கடந்த ஆறுமாதங்களாக, தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்த இளம் தாய்மார், கர்ப்பிணித் தாய்மார்கள் மேலே கூறப்பட்ட இரண்டு காரணங்களாலும் பாதிக்கப் படுகிறார்கள். அதனாலேயே கர்ப்பவதிகள், சிசுக்களின் மரணங்கள் அதிகரிக்கின்றன. பிறக்கும் பிள்ளைகளும்ஏதோ ஒருவித பாதிப்புடன காணப் படுகின்றன.

எனவே விமானத் தாக்குதல்களும், ஏனைய இராணுவ நடவடிக்கைகளும், இப்போது வாழும் தமிழர்களை மட்டுமன்றி, பிறக்க இருக்கும் தமிழர்களின் எதிர்காலச் சந்ததியையும் அழிக்கின்றன. இது தமிழர்களின ஒரு தலைமுறையையே இல்லாமற் செய்யும் சூழ்ச்சி என்றே கூறவேண்டும். மிகப் பெரும் பாரதூரமான இன அழிப்பும் ஆகும.

சர்வதேச மன்னிப்புச் சபை, மற்றும் மனித அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதில் அக்கறையுள்ள சர்வதேச நிறுவனங்கள், இப்போது தமிழ்ப் பகுதிகளில் காணாமற்போவோர், இராணுவத்தால் கொலை செய்யப்படும் பொதுமக்கள் குறித்துக் கண்டனமும், விசனமும் தெரிவித்து உலகின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றன.

அதேபோல, கர்ப்பிணித் தாய்மாலரயும், கருவில் இருக்கும் தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினரையும் அரசு மறைமுகமாக அழிப்பதை உலகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மனிதனின் லெளகீக வாழ்க்கையில், அவன் தனக்கு ஒரு சந்ததியை, உருவாக்குவது - பிள்ளைப்பேறு பெறுவது — அடிப்படை மனித உரிமைகளில் முதன்மை மட்டத்தைச் சேர்ந்தது.

அந்த உரிமைகள் மீறப்படுவது மறைத்து வைக்கக் கூடிய ஒன்றல்ல. பரந்த அளவில் சுட்டிக்காட்டப்பட்டு, கண்டிக்கப்பட்டு, தண்டிக்கப் பட்டு, நிறுத்தப்பட வேண்டியதாகும்.

# மட்டக்களப்பில் பெரும் வெள்ளம் வயல் நிலங்கள் அழிவு

## பலர் வீடு, வாசல் இழந்தனர்

மட்டக்களப்பு, டிச. 9

கடந்த இரண்டு வாரகாலமாகப் பெய்யும் மழையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தின் கீழ் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வெள்ளத்தின் மூாக்கத்தினால் தமது வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகர ஏரி நிரம்பி வழிகிறது.

வெள்ளம் மண்டூர் முருகன் ஆலயம் வரை மேவிப் பாய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், டிச. 9

மாவீரர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க பணியாளர்களால் ஓராம் கட்டைச்சந்தியில்இருந்து சிவன் கோவிலடிச்சந்திவரையுள்ள பிரதான வீதியின் இருபக்கங்களும் சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்பட்டன. (இ)

## வாழப்பாடிக்கு பொலீஸ் பாதுகாப்பு

சென்னை, டிச 9

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கு தமிழக அரசு பொலீஸ் பாதுகாப்பு வழங்கியுள்ளது.

அவரது வீட்டைச்சுற்றி துப்பாக்கிகளுடன் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர்.

அவருக்கு மெய்ப்பாதுகாவலர் ஒருவரின் சேவையும் வழங்கப்பட்டு உள்ளது.

அவரது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக சென்னை நகர பொலீஸ் கமிஷனர் ராஜசேகரன்நாயர் தெரிவித்தார். [இ-எ]

# வேலணை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது

அனலைதீவு, டிச. 9

வேலணை அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது.

யாழ் பதில் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஜி. பொன்னம்பலம் இந்த வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை கடந்த 4 ஆம் திகதி அனுப்பி வைத்தார்.

மேலும் அவர் தகவல் தருகையில், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். (இ-18)

## இரசிகமணி நினைவுதினம்

யாழ்ப்பாணம், டிச. 9

இரசிகமணி கனக செந்திநாதனின் 13 ஆவது நினைவு தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர்சம்பன்கோட்டத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆதரவில் அதன் தலைவர் கலாசேகரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தின் தொடக்கவுரையும், திரு. சொக்கனின் நினைவு நாள் உரையும் இடம் பெறும் (இ-3)

## வாகன லைசென்ஸ் கட்டணம் 40 சதவீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, டிச. 9

மோட்டார் வாகனங்களுக்கான வருடாந்த லைசென்ஸ் கட்டணம் அடுத்த ஆண்டு முதல் 40 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது:

வாகன லைசென்ஸ் கட்டணம் அறவிடும் அதிகாரம் அடுத்த ஆண்டு முதல் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவிருப்பது தெரிந்ததே.

மோட்டார் வாகன உரிமையாளர்கள் இனிமேல் அந்தந்த மாகாணசபை அலுவலகங்களில் கட்டணத்தைச் செலுத்தி வாகன லைசென்ஸ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப் படுகிறது. [இ-எ]

## அனலைதீவில்

# 2 கிராம சேவகர்கள் இருந்தும் ஒருவராவது கடமையில்இல்லை

அனலைதீவு, டிச. 9

அனலைதீவில் இரு கிராம சேவகர் பிரிவுகள் உள்ள போதிலும், கடந்த ஜுன் மாதம் தொடக்கம் ஒரு கிராமசேவகராவது கடமையில் இல்லை.

அனலைதீவில் சுமார் 850 குடும்பங்கள் வசிக்கின்றன. இதுவரையில் இவர்களுக்கு பங்கீட்டு உணவு அட்டைகள் வழங்கப்படவில்லை. போக்குவரத்து வசதியற்ற இத்தீவு மக்கள் தங்கள் தேவைகளைப் பெறமுடியாது உள்ளனர் என்றுகூறப்படுகிறது. [இ-18]

## நீரிழிவுக்கு துளசி

நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் மூலிகையாக துளசிச்செடி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உதயப்பூர் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த ஆய்வின் போது இது கண்டுபிடிக்கப் பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

# பல்கலைக் கழகங்களில் வெளிவாரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 9

பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைக்காத மாணவர்களும் பட்டம்பெற வாய்ப்பு அளிக்கும் வகைகளில் சகல பல்கலைக்கழகங்களும் வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளை நடத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ் மாணவர்களுக்கு இந்தப் பரீட்சையை இதுவரை காலமும் பேராதனைப் பல்கலைக்கழகம் மட்டுமே நடத்தி வந்தது.

இந்த புதிய அனுமதியை அடுத்து யாழ்ப்பாணம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் இந்தப் பரீட்சை நடத்தப்படவிருக்கிறது. [இ-3]

## அகதி முகாமிலுள்ளோருக்கு உலர் உணவு அட்டைகள்

யாழ்ப்பாணம், டிச. 9

அகதி முகாம்களில் உள்ளவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள உலர் உணவு அட்டைகளை ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் வாரா வாரம் சமர்ப்பித்து உணவுப்பொருள்களைப் பெறலாம்.

மேற்கண்ட தகவலை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு இணைப்பதிகாரி திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

அகதிமுகாம்களில் உள்ளவர்களுக்கு உணவுப்பொருள் வழங்குவது குறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

இதுவரை காலமும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட உணவு விநியோகத்தை புனர்வாழ்வுப் பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

அகதிமுகாம்களில் உள்ளவர்கள் பற்றிய பட்டியல் அந்த அந்த ப. நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கு வழமைபோல் நிவாரணம் கிடைக்கும் என்றார் அவர். [இ-3]

## மருதனார்மடம் கோட்ட அதிபர்கள் கூட்டம்

நவாலி, டிச. 9

நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மருதனார்மடம் கோட்ட, கொத்தணி அதிபர்களின் கூட்டம் மருதனார்மடம் கோட்ட கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

பாடசாலைகளில் ஆசிரியர் வரவு, ஆசிரியர் இடமாற்றம் உட்பட பல்வேறு விஷயங்கள் கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

## இந்து இளைஞர் மன்ற பாதயாத்திரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் மண் மீட்புப்போராட்டம் வெற்றிபெற வேண்டியும், நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ வேண்டியும் பாதயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் இதனை ஏற்பாடு செய்தது.

மட்டுவில் சிவன் கோவிலில் ஆரம்பமாகி கல்வயல் சாவகச்சேரி ஊடாக சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலில் பாதயாத்திரை முடிவுற்றது.

ஆத்மஜோதி நா. முத்தையா பாதயாத்திரையை ஆரம்பித்து வைத்தார்.

சரசாலை இந்து இளைஞர் மன்ற போஷகர் திரு. ச. நமசிவாயம், மட்டுவில் இந்து இளைஞர் மன்றப் போஷகர் பிரம்மஸ்ரீ தி. சோமசுந்தரக்குருக்கள் உட்படப் பலர் ஆசியுரை வழங்கினர். (இ-30)

## தீவுப்பகுதியிலும் மின் மாற்றி ஒயில் திருட்டு

புளியங்கூடல், டிச. 9

தீவுப்பகுதியிலும் மின்மாற்றிகளில் ஒயில் திருடப்பட்டு வருகிறது.

சுருவில், வேலணை ஆகிய பிரதான மின் மாற்றிகளில் இருந்தே ஒயில் திருடப் பட்டுள்ளது.

ஏற்கனவே விமானத் தாக்குதல்களினால் மின் கம்பங்கள் சேதமடைந்துள்ளன என்றும் யாழ். குடாநாட்டுக்கு மின் விநியோகம் கிடைத்தாலும் தீவுப்பகுதிக்கு கிடைப்பது கடினமாக இருக்கும் எனவும் வேலணை மின்சாரசபை உத்தயோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (இ-125)

# ஈழத்தமிழர் பாதுகாப்புக் குறித்து இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்

## சென்னையில் வி. பி. சிங்

சென்னை, டிச. 9

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்படி இலங்கை அரசை இந்தியாவின் தற்போதைய அரசு வலியுறுத்திக் கேட்க வேண்டும்.

முன்னாள் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ் நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்று கூறுவதற்கே இடமில்லை. சட்டம் - ஒழுங்கு நல்ல முறையில் மாநில அரசால் பேணப்பட்டு வருகிறது.

மக்கள் தீர்ப்புடன் சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசு ஒன்றை கலைப்பதற்கு எதுவித நியாயமும் கூறமுடியாது.

தமிழக மாநில அரசைக் கலைப்பதற்காக, தமிழீழ விடுதலைப்புலிகள் மாநிலத்தில் நடமாடுவதாக கூறப்பட்டு வருகிறது.

இலங்கையில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளுக்கு மனிதாபிமான முறையில் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப் படையை இலங்கையில் இருந்து வாபஸ் வாங்கிக் கொண்டதில் தவறு எதுவும் இல்லை. படையை வாபஸ் வாங்கும்படி இலங்கை அரசு கேட்டுக்கொண்டதன் பின்னர்தான் படை வாபஸ் வாங்கப்பட்டது.

இப்படி திரு. சிங் சொன்னார்.

சென்னைக்கு விஜயம் செய்த திரு. சிங்கை முதலமைச்சர் கருணாநிதி வரவேற்றார். (இ-எ)

## அகதிகளின் வசதிக்காக துர்க்காபுரத்தில் மண்டபம்

மல்லாகம், டிச. 9

அகதிகளின் வசதிக்காக துர்க்கையம்மன் ஆலய சூழலில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

தேவஸ்தான தலைவி செல்வி தங்கம்மா அப்பாகுட்டி இதனைத் திறந்து வைத்தார்.

இப்பொழுது இப்பகுதியில் 800 க்கும் மேற்பட்ட அகதிகள் தங்கி உள்ளனர். (இ - 86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்திய ராணுவ நடவடிக்கையால்

# யாழ். மாவட்டத்தில் மட்டும் 100 பேருக்கு மேல் ஊனம்

யாழ்ப்பாணம், டிச. 9

கடந்த ஜுன் மாதத்தில் இருந்து தொடர்ந்து நடந்து வரும் இராணுவ நடவடிக்கைகளினால் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் தமது கால்களை அல்லது கைகளை இழந்து ஊனமாகியுள்ளனர்.

இவர்களில் 83 பேர் செயற்கைக் கால், கைகளுக்காக ஜெய்ப்பூர் நிறுவனத்திடம் விண்ணப்பித்துள்ளனர். இந்த 83 பேரில் 74 பேர் கால்களுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் மூன்று பெண்கள் உட்பட 52 பேருக்கு இதுவரை செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளதாக ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை முகாமையாளர் திரு. எக்ஸ். ஏ. வை. பிரான்ஸிஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை வடக்கு – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 414 பேருக்கு செயற்கைக் கால்களும் 22 பேருக்கு செயற்கைக் கைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

செயற்கைக் கால்களை பொருத்தியோர் மாவட்ட அடிப்படையில் வருமாறு:-

யாழ்ப்பாணம் - 232, மட்டக்களப்பு - 44, கிளிநொச்சி - 21, மன்னார் - 11, வவுனியா - 13, முல்லைத்தீவு - 11, திருகோணமலை- 16, அம்பாறை - 1. (ஒ-6)

## லங்காசிறி நேற்று வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 9

இரண்டாயிரத்து 400 மெற்றிக் தொன் உணவுப்பொருள்களுடன் 'லங்கா சிறி' கப்பல் நேற்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் யாழ் மாவட்டத்துக்குத் தேவையான விசர்நாய்க்கடி நோய்த் தடுப்பு ஊசி மருந்தும் மற்றும் சில மருந்து வகைகளும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## ப. நோ. கூ. ச. கிளைகளில் ம.எண்ணெய்க்கு மாற்று!

பருத்தித்துறை, டிச.9

ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு இப்போது கால் லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படுகிறது.

ஆனால் சில கிளைகள் மண்எண்ணெய் வழங்குவதில்லை என்று பொதுமக்கள் பலர் புகார் செய்கின்றனர்.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள ப. நோ. கூ. ச. கிளை ஒன்று கால் லீற்றர் மண்எண்ணெய்க்குப் பதிலாக, மாற்றாக நான்கு சுருட்டுக்களை வழங்குகிறது என்பதும் இந்தப் புகார்களில் ஒன்று.

இன்னும் சில கிளைகளில் மண்எண்ணெய்க்குப் பதிலாக ரொபி, பீடி என்பனவும் வழங்கப்படுகின்றனவாம். [இ-118]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
மருத்துவபீடம்

**3ஆம் ஆண்டு மருத்துவபீட பரீட்சையும், 2ஆம் ஆண்டு மருத்துவ பீட பரீட்சையும்**

மேற்கூறப்பட்ட பரீட்சைகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

– பதிவாளர்

(C-5514)

## பருத்தித்துறை இலங்கை வங்கியில் நாளை ஓய்வூதியர்

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே ஓய்வூதியம் பெறாதவர்கள் மட்டும் நாளை திங்கட்கிழமை காலை இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-118)

## சுட்டுக் கொலை

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதியில் ரெலோ இயக்கத்தினரால் செபமாலை (வயது 45) என்ற நபர் சுட்டுக் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சேமிப்பு வங்கி ரூ. 500 வழங்கும்

பருத்தித்துறை, டிச.9

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளை தனது வாடிக்கையாளர்களுக்கு வாரம் தோறும் புதன்கிழமைகளில் 500 ரூபாவை வழங்கவுள்ளதாக முகாமையாளர் திரு. க. கமலசேகரம் தெரிவித்துள்ளார். [ஒ-118]

## இலங்கைக்கு வெற்றி!

பனாஜி, டிச-9

இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி ஏழு விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

கோவாவில் நடைபெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி 3 விக்கட்டுகளை இழந்து 137 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே நடைபெற்ற இரண்டு ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலும் இந்தியஅணி வெற்றியீட்டியது தெரிந்ததே. [உ-எ]

## ● இப்படியும் திருட்டு!

யாழ்ப்பாணம், டிச. 9

தோட்டத்தில் நடப்பட்ட வெங்காயமும் கிளறி எடுக்கப்படும் சம்பவங்கள் தற்போது வடக்கில் இடம் பெற்று வருகின்றன.

நவக்கிரிப் பகுதியில் ஒருவர் தமது இரண்டு பரப்புக் காணியில் வெங்காயம் நட்டிருந்தார். நட்ட 3 ஆம் நாளில் இரவோடிரவாக திருடர்கள் அவற்றைக் கிளறி எடுத்துச் சென்று விட்டனராம். (இ-15)

## மருந்துக்குப் -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து 429 மருந்துப் பொதிகள் கடந்த மாதம் 20ஆம் திகதி கப்பலில் வந்து சேர்ந்தன.

அவற்றில் 200 பொதிகள் மருந்து வகைகள் அல்ல. இருதயத் துடிப்பைப் பதியும் தாள்களே (E. C. G. Record -ing Papers) அந்த 200 பொதிகளுக்குள் இருந்தமை கண்டு இங்குள்ள அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

ஏனெனில் அவை தேவையெனக் கேட்கப்படவில்லை. அவசிய மருந்துகள் இல்லாமல் இருக்கும்போது ஈ.சி.ஜி. தாள்களையா கேட்கப்போகிறார்கள்!

200 பொதிகளில் வந்து சேர்ந்த அந்தத் தாள்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ. சி. ஜி. இயந்திரங்களுக்குப் பாவிப்பதற்குரிய அளவுடையவை தானும் அல்ல.

அந்தத் தாள்கள் இப்போது வேண்டாத சரக்காக களஞ்சியத்தில் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன!

கொழும்பில் உள்ள சுகாதாரத் திணைக்களத்தின் இந்தச் செய்கையை என்னென்று சொல்வது?

அக்கறையின்மையா? அசமந்தமா? வம்புத்தனமா? ஏமாற்று வித்தையா? (அ-6)

## மன்னாரில் மரணதண்டனை

யாழ்ப்பாணம், டிச. 9

மன்னாரில் இராணுவத்தினருடன் தகாத முறையில் தொடர்பு கொண்டும், மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்ததாகக் கருதப்படும் இளம் பெண் ஒருவருக்கு விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் மரண தண்டனை விதித்தனர்.

பேசாலையைச் சேர்ந்த அன்னபூரணி (கொலன்) என்ற 29 வயதுப் பெண்ணுக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் —

மூன்று முறை திருமணம் செய்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## 493 பல்கலை. மாணவருக்கு மகாபொல புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், டிச 9

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 493 மாணவர்கள் 89-90 ஆம் ஆண்டுக்கான மகாபொல புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் 66 பேர் 'திறமைப் புலமைப் பரிசில்' பெற்றுள்ளனர்.

புலமைப் பரிசில் பெற்ற மாணவர் எண்ணிக்கை பாடவாரியாக வருமாறு:

கலை - 151, பௌதிக விஞ்ஞானம்- 94, உயிரியல் விஞ்ஞானம் - 39, மருத்துவம் - 48, விவசாயம் - 16, முகாமைத்துவம் - 67, வர்த்தகம் - 78.

புலமைப்பரிசில் பெறாத மாணவர்களிலிருந்து வருமான அடிப்படையில் ''உதவிப்பணம்'' [Bursary] பெற இருப்பவர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர் என பல்கலைக்கழக பதிவாளர் திரு. சே. பரமேஸ்வரன் தெரிவித்தார் (இ-6)

## இராணுவ சூட்டுக்கு இரு பொதுமக்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிச. 9

கடந்த வியாழனன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில் முகாமிலிருந்து வந்த விசேட அதிரடிப்படையினர் விநாயகபுரம் பகுதியைச் சுற்றிவளைத்தனர்.

ஆறு பொதுமக்களை அவர்கள் கைது செய்ததாகவும் –

கைதானவர்களில்இருவரை அவர்கள் அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றுவிட்டு ஏனைய நால்வரையும் தம்முடன் கொண்டுசென்று தடுத்து வைத்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## குடும்பமாது மீது இராணுவ வன்முறை

யாழ்ப்பாணம், டிச. 9

கடந்த மாதம் 28ஆம் திகதி மூதூர் ஜி பி.எஸ். இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சம்பூரில் வைத்து இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி மோகனசுந்தரம் மலர் (வயது 24) என்ற பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன. (உ)

## 2 வாரங்களுக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''அன்ரிபயற்றி''க் மருந்துகள், சிறு பிள்ளைகளுக்கான வக்சீன்கள், சலரோகநோய்க்கான குளிகைகள், மனநோயாளருக்கான மருந்து வகைகள், சேலைன் போத்தல்கள், ''பான்டேஜ்'' என்பனவற்றுக்கே அதிக தட்டுப்பாடு நிலவி வருகிறது என்றும் சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-6)

## இடம் மாற்றம்

பருத்தித்துறையில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வீச்சை அடுத்து வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம் மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [ஒ-118]

## ஜே. ஆர். மீண்டும்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று பாபா என்னிடம் சொன்னார்–

இதை அவர் கூறியபோது இலங்கையில் சண்டை நடக்கவில்லை. எந்த ஓர் இடத்திலும் சண்டை இல்லாமல் நாடு முழுவதும் அமைதியே நிலவியது. இப்போது பின் நோக்கிப் பார்க்கும் போது, இது சத்யசாயி பாபாவின் தீர்க்கதரிசனமாகவே எனக்குத் தோன்றுகிறது.

சத்யசாயி பாபா என்னைத் தன்னருகே அழைத்தார். தனது வலது கையை நீட்டி காற்றில் அசைத்தார். அவரது அந்தக் கையிலே தங்கச் சங்கிலி ஒன்று இருந்தது. அதில் நீலம், சிவப்பு, வெள்ளை நிறங்களினாலான இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. என்னை ஆசீர்வதித்து அந்தத் தங்கச் சங்கிலியை எனக்குத் தந்தார். மிகுந்த நம்பிக்கையோடு அதைப் பெற்றுக் கழுத்தில் அணிந்து கொண்டேன் —

சங்கிலி தருவதற்கு முன்னர், அவருடன் நடந்த ஒரு மணி நேரச் சந்திப்பில் அவர் என்னைப் பார்த்து, ''எதிர்காலத்தில் நான் பல சஷ்டங்களை எதிர்நோக்கவேண்டி இருக்கும் என்றும், **பல பொறுப்புகளைச் சுமக்க வேண்டியிருக்கும் என்றும்** முன்னெச்சரிக்கை செய்தார் - என்றுதிரு. ஜே. ஆர். தமது பேட்டியில் கூறியிருக்கிறார் [அ]





(C-5517)


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் நடேசு

வேலணை கிழக்கு சோமசுந்தரம் நடேசு காலமானார். அன்னார் மகேந்திரா ஸ்ரோஸ் உரிமையாளரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேந்திரன் (குமாரி விடியோ சென்றர் யாழ்ப்பாணம், வேலணை) இரவீந்திரன், நடேசசாந்தன், பவானி, இரத்தினவேணி, இரத்தினசிறி, இரத்தினரூபி, இரத்தினரதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவராசா, கிருஸ்ணபிள்ளை ஜெயகாந்தன் [ஜெயா பன்சி ஹவுஸ் யாழ்ப்பாணம்] பேரின்பரதி, ராதா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 09-12-1990 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தல உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. மகேந்திரன் (மகன்)
வேலணை கிழக்கு. (15071)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org